***IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD.***

***DATE : 26.11.2025***

Case No. : OS.43/2022

Deposition of Witness for Plaintiff : PW.2

Name : சுரேஷ்குமார்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 26th day of November 2025

**(விசாரணை தொடங்கப்பட்ட நேரம் 11.51.A.M.)**

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1. தாவா சொத்திற்கும் கிழக்கு திசையில் எனது வீடு அமைந்துள்ளது என்றால் சரிதான். என் வீட்டின் பழைய கதவு எண்.205 ஆகும். கதவு எண்.206 யாருடைய வீடு என்றால் எங்களுடையது தான் அது தான் வழக்கு சொத்தாகும். எனது தந்தை மணி இறந்துவிட்டார் என்றால் சரிதான். தாவா சொத்தில் கண்ணையன் மனைவி மணியம்மாள் குடியிருந்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஜெரினாக்காட்டில் அமைந்துள்ள நிலத்தினை பத்திர அலுவலகத்தில் கிரயம் கொடுக்கவோ, கிரையம் வாங்கவோ முடியாது என்றால் சரிதான்.

2. ஜெரினாகாட்டில் வசிப்பவர்கள் அனுபவித்து வரும் சொத்துக்களை அவர்களுக்குள்ளாகவே ஆவணங்களை தயார் செய்து அதன்படி அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். வழக்கின் பிரதிவாதி குமார் எனது வீட்டின் அருகில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். 18.05.2015-ம் தேதியன்று பதிவு செய்யப்படாத கிரைய ஆவணத்தின் மூலம் எனது சித்தப்பா பழனிசாமி வழக்கு சொத்தினை கிரையம் கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது. அவ்வாறு கிரையம் ஏற்பட்டதிலிருந்து வழக்கு சொத்தில் கண்ணையன் மனைவி மணியம்மாள் என்பவருடன் எழுத்து மூலமான வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்தி தற்போது வரை குடியிருந்து வருகிறார் என்றால் அதுபற்றி தெரியாது.

3. மேற்படி தாவா சொத்திற்காக பிரதிவாதி எனது சித்தப்பா பழனிசாமியிடம் ரூ.4,50,000/- தொகையை மறுபயணாக கொடுத்தே வழக்கு சொத்தினை வாங்கியுள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது. மேற்படி வழக்கு சொத்தின் சுவாதீனம் தன்னிடம் இல்லை எனவும், அதனை மீட்டு தரக்கோரி வாதிகள் 2017-ம் ஆண்டு ஏற்காடு காவல் நிலையத்தில் எழுத்து மூல புகார் கொடுத்தார்கள் என்றால் சரிதான். 2019-ம் வருடம் வழக்கின் வாதி மவாட்ட சட்டப்பணி ஆணைக்குழுவிலும் மேற்சொன்னவாறு புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

4. மவாட்ட சட்டப்பணி ஆணைக்குழுவில் புகாரினை தொடர்ந்து அதில் விசாரணை நடந்தது என்றால் சரிதான். விசாரணைக்கு பின்னிட்டு மவாட்ட சட்டப்பணி ஆணைக்குழுவில் வாதிகளுக்கிடையே வழக்கு சொத்தின் ஆவணத்தின் அடிப்படையில் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து பரிகாரம் பெற்றுக்கொள்ளவேண்டி புகார் முடிக்கப்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது. தாவா சொத்தில் 2015-வருடத்திலிருந்து இன்றுவரை வாதிகள் குடியிருக்கவில்லை மற்றும் சுவாதீனத்திலும் இல்லை என்றால் சரிதான்.

5. எனது சித்தப்பாவிற்கும் அவரது மனைவிக்கும் சரியான பேச்சுவார்த்தை இல்லை என்றும், எனது சித்தப்பா உள்ளவரை அவர் மட்டுமே வழக்கு சொத்தில் குடியிருந்தார் என்றால் சரியல்ல, அவருடன் சேர்ந்து எனது சித்தியும், அவரது மகளும் இருந்தனர். எந்த காலத்திலும் வாதிகள் தாவா சொத்தில் குடியிருக்கவே இல்லை என்றால் சரியல்ல. எனது சித்தப்பா கேரளாவிற்கு சென்று 10 வருடங்கள் இருக்கும் என்றால் சரிதான். தாவா சொத்து விற்றது சம்மந்தமாக எனது தங்கை 1-ம் வாதி ஏற்காடு காவல் நிலையத்தில் 2015-ம் ஆண்டு புகார் கொடுத்தார் என்றால் அதுபற்றி தெரியாது.

6. உரிய மறுபயன் கொடுத்து பிரதிவாதி வழக்கு சொத்தை வாங்கியிருந்தும், எங்களுக்குள்ளே போலியான ஆவணத்தை தயார் செய்து தற்போது வழக்கு சொத்தினை அபகரிப்பதற்காக தாவா தாக்கல்

செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணமானது வழக்கிற்காக போலியாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தானது சின்னபொண்ணு மற்றும் சித்தன் என்பவருக்கு சம்மந்தப்பட்டது என்பற்கு ஆதரவாக வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

7. வழக்கு சொத்தினை தானசெட்டில்மெண்ட் செய்வதற்கு வாதிகளுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. என் சித்தப்பா பழனிசாமி கேரளாவில் எங்குள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியாது. எனது சித்தப்பாவிற்கும் எனக்கு தற்போதும் சுமுகமான உறவே உள்ளது என்றால் சரியல்ல. என் சித்தப்பாவை நேரடியாக நீதிமன்றத்திற்கு அழைத்துவந்தால் வழக்கின் உண்மை தெரிந்துவிடும் என்ற காரணத்தினால் அழைத்து வரவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து பதிவு செய்யப்பட முடியாதா காரணத்தினால் வழக்கு சொத்தினை பிரதிவாதிக்கு கிரையத்தை கொடுத்துவிட்டு கிரையம் கொடுத்த விவரம் நன்கு அறித்தே பின்னிட்டு பிரதிவாதியை ஏமாற்றும் நோக்கிலேயே தாவா வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

8. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.10–ல் உள்ள கைரேகை போலியாக என் குடும்பத்தால் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனது பாட்டி சின்னபொண்ணுவின் கைரேகை தான் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.10–ல் உள்ளது என்பதனை நிரூபணம் செய்யும் வகையில் வேறு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதிகள் பிரதிவாதியிடமிருந்து கடன் பெற்றனர் என்றும், அந்த கடனை திரும்ப செலுத்ததால் வழக்கு சொத்தை பிரதிவாதி பூட்டிவிட்டார் என்று பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது மேற்படி சங்கதியினை நிரூபணம் செய்யும் வகையில் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

9. பிரதிவாதி கடன் கொடுக்கவில்லை என்றும் நாங்கள் கடன் வாங்கவில்லை என்றும் வாதிகளின் தந்தை அவருக்கு பாத்தியப்பட்ட

சொத்தினை பிரதிவாதிக்கு முறையான மறுபயணுக்கு கிரையம் கொடுத்து விட்டு சென்றதனை அபகரிக்க வேண்டி தவறான ஆவணங்களை தயார் செய்து பிரமாண பத்திரித்தின் தவறான தகவல்கள் என்னால் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 18.06.2018–ம் தேதி வாதிகள் பிரதிவாதிக்கு எதிராக ஏற்காடு காவல் நிலையத்தில் சட்டத்திற்கு புறம்பாக வாதிகளின் வீட்டை பூட்டிய காரணத்திற்காக புகார் மனு கொடுத்தார்கள் என்றும், காவல் நிலைய விசாரணையின் போது கடன் தொகையை திரும்ப செலுத்தவில்லை என்றால் பூட்டை திறக்க முடியாது என பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் மேற்படி சங்கதியினை நிரூபணம் செய்ய ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

10. பிரதிவாதி ஏற்காடு சுற்றுவட்டாரத்தில் அதிக வட்டிக்கு பணம் கொடுத்து வட்டி லேவாதேவி செய்து வருகிறார் என்பதற்கு ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பிற நபர்களிடம் வட்டிக்கு பணம் கொடுத்து திருப்ப கட்டமுடியாத சூழ்நிலையில் அவர்களது வீட்டை இதே போல் தனக்கு சொந்தம் என்று அபகரித்துக்கொண்டுள்ளார் என்ற சங்கதிக்கு ஆதரவாக ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

11. நீதிமன்றத்தின் அனுதாபத்தினை பெறவேண்டி பிரதிவாதி மீது எவ்வித அடிப்படை முகாந்திரமும் இல்லாத குற்றச்சாட்டினை பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா வழக்கில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.10 ஆவணமானது ஒரே தேதியில் தயாரிக்கப்பட்டிருந்தால் ஆவணத்திலும் அதே தேதியே வந்திருக்கும் என்றும், வேறு வேறு தேதிகளில் போலியாக தயாரிக்கப்பட்ட காரணத்தினால் தான் அவ்வாறு தேதிகளில் வேறுபாடு உள்ளது என்றால் சரிதான், எனது தங்கை ஊரிலிருந்து வருவதற்கு இரண்டு நாட்கள் ஆகிவிட்ட காரணத்தினால் அவ்வாறு தேதி வேறுபாடு ஏற்பட்டது. மேற்படி சங்கதியினை பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

12. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எந்த சங்கதியும் தெரியாது என்றும், பிரதிவாதியிடம் கொடுக்கப்பட்ட வழக்கு சொத்தினை திரும்ப பெற வேண்டி போலி ஆவணங்கள் மூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கானது நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 மற்றம் வா.சா.ஆ.9 ஆவணங்களுக்கும் தாவா சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 மற்றம் வா.சா.ஆ.9 உள்ள கதவு எண் மற்றும் வரிவிதிப்பு எண் வழக்கு சொத்திற்கு கொடுக்கப்பட்ட வா.சா.ஆ.1 ஆவணத்திலுள்ள விவரங்களுக்கும் வேறுபாடு உள்ளது என்றால் அதுபற்றி தெரியாது.

13. தாவா வழக்கினை பொறுத்து எனக்கு எதுவும் தெரியாது என்றும், எனது தங்கை கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரமாண பத்திரிக்கையில் உள்ள செய்திகள் பொய்யானது என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது).

(விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 12.34.P.M)

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

R ELANCHEZHIAN

Digitally signed by R ELANCHEZHIAN
Date: 2025.11.26 12:35:54 +0530

District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.